# <u>அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை</u>

## <u>Ang Mo Kio Tamil Methodist Church</u>

***<u>30th ஆகஸ்ட் / August 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service</u>***

***<u>Healing Service</u>***

| | |
|---|---|
| † **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. சாலமன் தேவசகாயம்**<br>Mr. Solomon Devasagayam |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. சாலமன் தேவசகாயம்**<br>Mr. Solomon Devasagayam |
| † **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

***<u>ஆராய்ந்து பாரும், கர்த்தரே</u>***

*1. ஆராய்ந்து பாரும், கர்த்தரே ;*
*என் செய்கை யாவையும்*
*நீர் காணுமாறு காணவே*
*என்னில் பிரகாசியும்.*

*2. ஆராயும் என்தன் உள்ளத்தை,*
*நீர் சோதித்தறிவீர்;*
*என் அந்தரங்க பாவத்தை*
*மா தெளிவாக்குவீர்.*

*3. ஆராயும் சுடரொளியால்*
*துராசை தோன்றவும்;*
*மெய் மனஸ்தாபம் அதனால்*
*உண்டாக்கியருளும்*

*4. ஆராயும் சிந்தை, யோசனை,*
*எவ்வகை நோக்கமும்,*
*அசுத்த மனோபாவனை*
*உள்ளிந்திரியங்களும்.*

| | |
|---|---|
| † ***மாறி வாசித்தல் 35ம் ஞாயிறு***<br>***"சங்கீதம் 103"*** | **சபையார் இணைந்து**<br>Congregation |

***"கர்த்தர் இரக்கமுள்ளவர்"***

Psalter Reading - "Psalm 103"

| | |
|---|---|
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **சாட்சியின் நேரம்**<br>Time of Testimony | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>† Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

***<u>வாரா வினை வந்தாலும்</u>***

**வாரா வினை வந்தாலும் சோராதே, மனமே;**
**வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.**

*1. சூரன் சதித்துன் மீது வலை வீசினாலும்,*
*சோராதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே; - வாரா*

*2. உலகம் எதிர்த்துனக்கு மலைவுசெய்தாலும்*
*உறுதிவிட்டயராதே நெறி தவறாதே; - வாரா*

*3. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே*
*பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே. - வாரா*

*4. தன் உயிர் ஈந்திட்ட உன் யேசுநாதர்*
*தள்ளுவரோ? அன்பு கொள்ளவர் மீதே. – வாரா*

*5. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,*
*மருள விழாதே நல் அருளை விடாதே.- வாரா*

*6. வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ?*
*வானவனை முற்றும் தான் அடைவாயே! – வாரா*

| | |
|---|---|
| † **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| † **திருமறைப் பாடம்**<br>Scripture Reading<br>***I யோவான் 4 : 1 – 6***<br>1 John 4 : 1 – 6 | **மாஸ்டர். ஈதன்**<br>Master. Ethan |
| **அருளுரை**<br>Sermon | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| † **அர்ப்பணகீதம்**<br>Offertory & Closing Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

## யோர்தானைக்கடக்கும்

**யோர்தானைக் கடக்கும் விசுவாசியே நீ**
**தேவனின் சத்தத்தைக் கேட்பாயோ**
**அவர் உன்னை வருந்தியழைக்கிறாரே**
**இரட்சிப்பார் உன்னை இந்நேரமிதில்**

*1. முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும்*
*நீயும் உன் பிள்ளைகளும் செவி கொடுத்தால்*
*உன் சத்தத்தைக் கேட்பார் இரங்குவார் உனக்கு*
*சேர்ப்பார் உன்னை அவர் மந்தையிலே - யோர்தானைக்*

*2. உன் சிறையிருப்பை நீக்கி உனக்கு இரங்கும்*
*உன் தேவனாகிய கர்த்தர் அவர்*
*கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும்*
*உன்னைக் கூட்டிச் சேர்த்திடுவார் - யோர்தானைக்*

*3. அவர் கற்பனைகள் பல கட்டளைகள்*
*முழு ஆத்மாவோடும் இதயத்தோடும்*
*நீ செவிசாய்த்துக் கைக்கொண்டு மனந்திரும்பினால்*
*சந்தோஷமடைவாய் என்றென்றுமே - யோர்தானைக்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனம்**
Memory Verse
***I யோவான் 1 : 7***
1 John 1 : 7

**சபையார் இணைந்து**
Congregation

***7. அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

**சபையார் நிற்கவும் ∕ Indicates Congregation standing**